ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகம்

## இரண்டாம் வகுப்பு

( முதல் பருவம் )

ஆசிரியர்

**குரும்பை உலகநாதன்**

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

**V.ஜெகந்நாதன்**

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

Ⓒ உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
முதல் பதிப்பு : 2020 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல் )
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

## தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# முகவுரை

**“செந்தமிழ் வாசகம்”** என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த “செந்தமிழ் வாசகம்”. தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறன் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (“CCE METHOD”) நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினை பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

# ஆசிரியர்க்கு ....









கடந்த காலக் கற்றலை அடித்தளமாகக் கொண்டு நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கேற்ற மொழித் திறன்களைக் குழந்தைகளிடம் வளர்க்கும் நோக்கில் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

முதல் வகுப்பில் கற்றுணர்ந்த கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், படைப்புத்திறன், விழுமியங்கள், வாழ்வியல் திறன்கள் போன்றவற்றை நினைவுகூர்ந்து வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் வகையில், 'விளையாட்டு உலகம்' என்ற தலைப்பில் ஆர்வமூட்டும் பல்வேறு செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.




இதுவரை கற்றுணர்ந்த அடிப்படை மொழித் திறன்களை நினைவுகூர்ந்து வெளிப்படுத்தும் வகையில் 'என் நினைவில்' என்கிற தலைப்பில் ஆர்வமூட்டும் செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.




மனமகிழ்வு, கற்பனை, தன்னம்பிக்கை, ஒழுக்கம், பணிவு ஆகிய நற்பண்புகள், வாழ்வியல்திறன்கள் ஆகியவற்றைப் பெருகச்செய்யும் நோக்குடன் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.




இதில் வரும் கதைகள், சொற்களற்ற படக்கதைகள், சொற்கள், சொற்களுடன் கூடிய சிறுதொடர்களைக் கொண்ட படக்கதைகள், உரையாடல் வடிவிலான படக்கதைகள் எனப் பல்வேறு விதமான வகைகளில் வடிவமைக்கப்பட்டுள்ளன.




மொழித்திறன்களுள் பேசுதல்திறனே நடைமுறையில் பெருமளவில் பயன்படுத்தப்படும் ஒன்றாக உள்ளது. அதிலும் குறிப்பாக, வாழ்வின் அன்றாட நிகழ்வுகளுள் இன்றியமையாததாக உரையாடல் விளங்குகிறது. அத்தகு உரையாடல்திறனை மேம்படுத்தும் வகையில் பாடப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன.






குழந்தைகள் தாமே பாடப்பகுதிகளைப் படித்தறிந்து திறன்பெறும் வகையில், தொடக்கத்தில் எளிய சொற்களில் பயிற்சியளித்து, படிக்கவும் வாய்ப்பளித்து, மெல்ல மெல்ல சிறுசிறு சொற்றொடர்களைப் படிக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் வகையில் பாடப்பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.















செய்யுள் பகுதியில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய ஓரடிச் செய்யுள் பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆத்திசூடி அடிகள், எளிதில் பொருளுணரும் வண்ணம் படக்கதைகள் வடிவில் வழங்கப்பட்டுள்ளன.

சொற்கள், சிறுசிறு தொடர்கள் ஆகியவற்றைக் குழந்தைகள் தாமே சொந்த நடையில் பேச, எழுத விருப்புடன் முன்வரும் வகையில் சொற்களஞ்சியப் பொருக்கத்திற்கான பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

புதிர்களை விடுவிப்பதும் தேடிக் கண்டறிவதும் குழந்தைகள் பெரிதும் விரும்புவார்கள். இவ்வியல்புகளைக் கற்றலுக்குப் பயன்படுத்தும் நோக்கிலும் இயற்கையை கண்டு வியக்க, போற்ற, பாதுகாக்கத் தேவையான நுண்ணுணர்வுகளைப் பெற ஏதுவாகவும் பாடப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சொல்லிக் கொடுத்து திரும்பிச் சொல்லவைக்கும் மனன முறையை விடுத்து, கலந்துரையாடவும், கேள்வி கேட்கவும் தருக்க முறையில் சிந்திக்கவும் சிந்தித்தவற்றை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. குழந்தைகளின் கருத்துகளையும் உணர்வுகளையும் உள்வாங்கி அவர்களை நெறிப்படுத்த இப்பகுதிகள் உதவும்.

குழந்தைகள் தான் காண்பவற்றை அறிந்து கொள்ள துடிக்கும் துடிப்பையும் பல்வேறு நுண்ணறிவுத் திறன்களையும் கருத்தில் கொண்டு அவர்கள் கற்கும் முறைகள், பாங்குகள், இயல்புகள், தேவைகள், விருப்பங்கள், ஆகியவற்றிக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் விழுமியங்கள், வாழ்வியல் திறன்களை வளர்க்கும் வகையிலும் இப்பாடநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடநூல் உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கங்களை உணர்ந்து, குழந்தைகள் கற்றலில் ஈடுபடப் போதிய வாய்ப்பளித்து, மொழிப்பாடக் கற்றலை இனிமையான, பயன்மிக்க அனுபவமாக நிகழ்த்திக்காட்டும் பெரும்பொறுப்பு நம் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நமது பயணம் மிகப் பெரிது, மிக இனிது.
குழந்தைமையைக் கொண்டாடுவோம்!
வகுப்பறை வண்ணமயமாகட்டும்!
அன்புடன்,











# பொருளடக்கம்


| வ.எண் | பாடத்தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1. | விளையாட்டு உலகம் | 7 |
| 2. | சொல்லாதே! சொல்லாதே! | 21 |
| 3. | பூங்கா பேசினால் ... | 24 |
| 4. | நானும் நாங்களும் | 29 |
| 5. | வண்ணம் தொட்டு ... | 34 |
| 6. | என் கற்பனையில் | 38 |
| 7. | விட்டுச் செல்லாதே | 45 |
| 8. | இறகு | 49 |
| 9. | ஆத்திசூடி | 52 |
| | வந்த பாதை | 59 |






# 1. விளையாட்டு உலகம்



## பட்டம் பறக்குது!

வண்ணப் பட்டம் பறக்குது
வளைந்து நெளிந்து பறக்குது
மெல்ல மெல்லத் தலையையாட்டி
மேலும் கீழும் பறக்குது



வானில் பட்டம் பறக்குது
வாலை ஆட்டிப் பறக்குது
அங்கும் இங்கும் ஆடியசைந்து
அழகாய் மேலே பறக்குது



வீசும் காற்றில் பறக்குது
வித்தை காட்டிப் பறக்குது
வட்டம் அடிக்கும் பறவையோடு
போட்டி போட்டுப் பறக்குது





பாடலைக் கேட்டு மகிழ்க. பின்தொடர்ந்து பாடுக.

அறிந்த பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் பாடுக.

# விடை சொல்! உள்ளே செல்!













அழகு மூக்கு இருக்குது
அருமையாகப் பறக்குது.
அது என்ன?

கழுத்துண்டு தலையில்லை
கையுண்டு காலில்லை
அது என்ன?

கிழித்து நாளும் எறிந்தாலும்
கிழமையைச் சரியாய்க் காட்டிடுமே.
அது என்ன?

அதட்டுவான் அலறுவான்
கோட்டையை விட்டு வரமாட்டான்.
அவன் யார்?

**பிறர் பேசுவதைக் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொள்க.**

# இனம் கண்டு இணை






## பொருத்து



## நிரப்பு

அ)



ஆ)



**படங்கள், ஓவியங்களை நுட்பமாக உற்றுநோக்கி தொடர்புகளை அறிக.**

# முகமூடி மாட்டு! நடித்துக்காட்டு!



















அறிந்தவற்றைப் பற்றி சொந்த நடையில் பேசுக.

## வரிசையாய் வாங்க! வளையத்தை வீசுங்க! பொருளைப் பெறுங்க.











**எனக்குப் பரிசாகக் கிடைத்தவை**

பரிசுப் பொருட்களின் பெயர்களைக் கூறி எழுதுக.

# முரண்பாடை கண்டுபிடி! விளக்கி கூறு









படங்களை நுட்பமாக உற்றுநோக்கி அறிக.




## படமே சொல்லாக.......













| | | | | | |
|---|---|---|---|---|---|
| கு | உ | ப | பா | மீ | பா |
| ரு | ர | ன் | ல் | ன் | க |
| வி | ல் | றி | பு | ப | ற் |
| கோ | ழி | ஆ | ட் | ட | கா |
| நா | ய் | மை | டி | கு | ய் |
| கு | ட | ப | வா | த் | து |






















**சொற்களை உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக.**

## இங்கே என்ன நடக்கிறது?




நீயா?நானா?



கதையைச் சொல்லுங்க. பாராட்டைப் பெறுங்க

**கதைப் படங்களை நுட்பமுடன் உற்றுநோக்குக. நிகழ்வைக் கூறுக.**

# பெயர் எழுது! பரிசு பெறு!



பெயரை
எழுதி
பரிசாய்
பொம்மையை
பெறலாமே




நீங்களும்
பெயர்களை எழுதுங்க
பொம்மைகளை
பரிசாக வெல்லுங்க



**படங்களைப் பார்த்து, பெயர்களை எழுதுக.**

# எழுத்தை நீக்கு! சொல்லை எழுது!




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஞ் + ஆ | ஞா | ல் + எ | | ற் + ஐ | | ய் + ஈ | |
| ட் + உ | | ங் + ஏ | | ர் + ஊ | | ட் + உ | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூ | ங் | ~~ஞா~~ | கொ | த் | து |
| நீ | ர் | தொ | ட் | லெ | டி |
| பௌ | ர் | றை | ண | யீ | மி |
| வா | த் | து | டு | ந | டை |
| நெ | ல் | வ | ஙே | ய | ல் |
| பொ | ரூ | ன் | ந | கை | டு |

★ பூங்கொத்து ★ ________ ★ ________

★ ________ ★ ________ ★ ________




சொற்களின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்பு அறிந்து படித்தும் எழுதியும் பழகுக.

# உணவகம் வாங்க! பட்டியலைப் படிங்க! பிடித்ததைச் சுவையுங்க!










சொற்களை உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக.

# வரிசைப்படுத்து! வழியைக் கண்டுபிடி!

பரிசை வாங்கு!




அகர வரிசையில் செல்லுங்க. பரிசைப் பெறுங்க








வழியைக் கண்டுபிடித்தோம் பரிசைப் பெற்றோம் நீங்களும் முயற்சி செய்யுங்க



**சொற்களை அகர வரிசைப்படுத்துக.**

# விளையாடு! வலிமை பெறு!













**பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடி மகிழ்க.**

## என் சொல் வங்கியில் சேமித்தவை

மைனா
தோசை
கிளி
யானை
நாய்
வெடி
ஆறு
பூனை
வடை
ஏர்

மேளம்
குதிரை
காகம்
பந்து
நத்தை
சீப்பு
விசிறி
சேவல்
முதலை
முயல்

குரங்கு
வானூர்தி
கண்ணாடி
பேருந்து
நெய்தோசை
கரும்பு
தேங்காய்
வான்கோழி
வெல்லம்
ஐப்பசி

மயில்தோகை
மீன்தொட்டி
பூங்கொத்து
பணியாரம்
பழச்சாறு
எலுமிச்சை
மிதிவண்டி
மசால்தோசை
உண்டியல்
நாள்காட்டி

இடியாப்பம்
கட்டெறும்பு
மெழுகுவர்த்தி
பூரிகிழங்கு
சோளப்பிட்டு
பனிக்கூழ்
ஈச்சமரம்
ஒலிபெருக்கி
ஊமத்தம்பூ
பல்லாங்குழி

சொற்களை உரிய ஒலிப்புடன் படித்தும் சொல்லக்கேட்டு எழுதியும் பழகுக.

# 2. சொல்லாதே! சொல்லாதே!



நீலவானம் தூரமென்று
பறவையிடம் சொல்லாதே
பறவையிடம் சொல்லாதே



அடர்ந்தகாடு இருண்டதென்று
யானையிடம் சொல்லாதே
யானையிடம் சொல்லாதே



பெரியகடல் ஆழமென்று
மீன்களிடம் சொல்லாதே
மீன்களிடம் சொல்லாதே



கற்பதெதுவும் கடினமென்று
எங்களிடம் சொல்லாதே
எங்களிடம் சொல்லாதே

பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொண்டு பாடி மகிழ்க

# பயிற்சி

## சொல்லிப் பழகுக.

| | | |
|---|---|---|
| தூரமென்று | ஆழமென்று | இருண்டதென்று |
| கடினமென்று | கற்பதெதுவும் | பறவையிடம் |
| யானையிடம் | மீன்களிடம் | எங்களிடம் |

## படித்தும் எழுதியும் பழகுக

| | | | |
|---|---|---|---|
| பறவை | யானை | மீன்கள் | இருட்டு |
| ஆழம் | கடினம் | தூரம் | நீலவானம் |
| | அடர்ந்த காடு | பெரிய கடல் | |

## பொருத்துக.

யாருக்கு எது கடினம் இல்லை?

| | | |
|---|---|---|
| 1. பறவை | - | காட்டின் இருட்டு |
| 2. யானை | - | கற்றுக் கொள்ளுதல் |
| 3. மீன் | - | வானத்தின் தொலைவு |
| 4. குழந்தைகள் | - | கடலின் ஆழம் |

## பேசுவோம் வாங்க!

இப்பாடலில் உங்களுக்குப் பிடித்தவை பற்றிக் கலந்துரையாடுக.

# எனக்கு எது கடினமில்லை வரைக



- வீட்டைக் காப்பேன் ☐
- குழி பறிப்பேன் ☐
- மரம் ஏறுவேன் ☐

- கரும்பு தின்பேன் ☐
- நீரில் நீந்துவேன் ☐
- நடனம் ஆடுவேன் ☐





- பால் கொடுப்பேன் ☐
- ஓட்டைச் சுமப்பேன் ☐
- பாடல் பாடுவேன் ☐

- பாய்ந்து ஓடுவேன் ☐
- மரம் ஏறுவேன் ☐
- பாரம் சுமப்பேன் ☐



## ஒத்த ஓசையில் முடியும் சொற்களைப் பாடலில் இருந்து எடுத்து எழுதுக.

| யானையிடம் | தூரமென்று |
|---|---|
| | |

## முதல் எழுத்தை மாற்றி எழுதுக.

| | | |
|---|---|---|
| ஆடு | பாடு | காடு |
| வால் | | |
| படை | | |
| கல் | | |

## பலமுறை சொல்லிப் பழகுக.

கோரைப் புல்லில் சாரை
கீரி பார்த்து சீறும்.

நம்ம தோசை நல்ல தோசை
தச்சன் தோசை தீஞ்ச தோசை.

கடலோரத்தில் அலை உருளுது
புரளுது தத்தளிக்குது தாளம் போடுது.

# 3. பூங்கா பேசினால்...







**கட்டளைகளையும், அறிவுரைகளையும் கேட்டுப் புரிந்துகொண்டு செயல்படுக.**


முன்னும் பின்னும் ஆடும் ஊஞ்சலை விட்டு இறங்குகிறேன். பிறரும் ஆடட்டும்.
மகிழ்ச்சி நல்ல பண்பு.
மற்றவருக்கும் வாய்ப்பு அளிப்பீர்.


இறைவன் தந்த உணவை வீணாக்கக்கூடாது அல்லவா!
சிந்தாமல் சிதறாமல் சாப்பிடுகிறாய், பாராட்டுகள்
உணவை வீணாக்காதீர்


குப்பையை குப்பைத் தொட்டியில் போடலாம்.
உன்னைப்போல் என்னை அனைவரும் பயன்படுத்தினால் நன்று.
குப்பையை குப்பைத் தொட்டியில் போடுவீர்


குடிநீர் குழாய் சரியாக மூடாமல் கொட்டிக் கொண்டே இருக்கிறதே? மூடிவிட்டுச் செல்வோம்.
தண்ணீரை வீணாக்காதீர்
நீர் வீணாவதைத் தடுத்ததற்கு நன்றி!


ஆச்சரியமாக உள்ளது. எப்படி எல்லாம் பேசுகிறது?
வருகைக்கு நன்றி.


சுமதி எழுந்திரு. பூங்காவிற்குச் செல்ல வேண்டுமே!
ஓ! நான் இதுவரை கண்டது கனவா?

# பயிற்சி

## படித்துப் பழகுக

| | |
|---|---|
| பூக்களைப் பறிக்காதீர் | மற்றவருக்கும் வாய்ப்பு அளிப்பீர் |
| உணவை வீணாக்காதீர் | குப்பையைத் தொட்டியில் போடுவீர் |
| தண்ணீரை வீணாக்காதீர் | |

## எழுதிப் பழகுக.

| | | |
|---|---|---|
| பூங்கா | கனவு | பூக்கள் |
| குடிநீர் | ஊஞ்சல் | குப்பைத்தொட்டி |

## பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗

1. சுமதி சென்ற இடம் கடற்கரை. ☐
2. சுமதி கண்டது கனவு. ☐
3. சுமதி  பூங்காவில் பூக்களைப் பறித்தாள். ☐
4. சுமதி தண்ணீர் வீணாகாமல் தடுத்தாள். ☐
5. சுமதியை எழுப்பியவர் அப்பா. ☐

## பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. பூக்கள் | - | குப்பையைத் தொட்டியில் போடுவீர் |
| 2. ஊஞ்சல் | - | பூக்களைப் பறிக்காதீர் |
| 3. தண்ணீர்க்குழாய் | - | உணவை வீணாக்காதீர் |
| 4. குப்பைத் தொட்டி | - | மற்றவருக்கும் வாய்ப்பு அளிப்பீர் |
| 5. உணவு மேசை | - | தண்ணீரை வீணாக்காதீர் |

## வாய்மொழி விடை தருக.

1. சுமதி பூங்காவில் என்னென்ன செய்தாள்?
2. இக்கதையிலிருந்து நீ அறிந்தவற்றைக் கூறுக.
3. சுமதியின் எந்தச் செயல் உனக்குப் பிடித்திருக்கிறது?

## விடை எழுதுக.

1. உணவைக் கீழே சிந்தக்கூடாது ஏன்?
2. பூங்காவில் எழுதப்பட்டிருந்த ஏதேனும் இரண்டு அறிவிப்புகளை எழுதுக.

## இவர்களுக்கு என்ன அறிவுரை சொல்லலாம்?






## இவை பேசினால் என்ன பேசியிருக்கும்? படத்துடன் பொருத்து



கரம், சிரம், புறம் நீட்டாதீர்



படிகளில் பயணம் செய்யாதீர்

பயணச்சீட்டு வாங்குவீர்



வரிசையில் நின்று ஏறுவீர்




## பொருத்தமான பெயரை உரிய கடையில் எழுதுக.

| உணவகம் | பல்பொருள் அங்காடி | இனிப்பகம் | ஆடையகம் |
|---|---|---|---|






# 4. நானும் நாங்களும்



வருண் செல்லம்



அண்ணா



வருண் தம்பி






வருண் குட்டி



வருண் கண்ணு



வருண்







தாத்தாவுடன் அடிக்கடி வெளியில் செல்வேன். அது எனக்கு மிகவும் பிடிக்கும்.


பாட்டி நன்றாகப் பாடுவார். பாட்டியுடன் சேர்ந்து நானும் பாடுவேன்.


தமிழ்
நான் செய்யும் சுட்டித்தனத்தையே என் தங்கையும் செய்வாள். அது பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.










## மகிழ்ச்சி



நான் நண்பர்களுடன்
விளையாடும்போதும்
உறவினர்களுடன்
இருக்கும்போதும்
மகிழ்ச்சியாய் இருப்பேன்.
நீங்கள் எப்போதெல்லாம்
மகிழ்ச்சியாக இருப்பீர்கள்?

உன்னுடைய உறவுகள் பற்றி நீயும் கூறலாமே!

# பயிற்சி

## படித்துப் பழகுக

| | |
|---|---|
| பொறுமையுடன் கேட்பார் | நன்றாகப் பாடுவார் |
| செய்து காட்டுவாள் | விளையாடப் பிடிக்கும் |
| செல்ல நாய்க்குட்டி | |

## எழுதிப் பழகுக.

| | | | |
|---|---|---|---|
| கதைகள் | கதைத்தலைவன் | நாய்க்குட்டி | உறவினர் |
| தங்கை | நண்பர்கள் | அடிக்கடி | பாடல் |

## பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗

1. வருண் எதையும் தன் நண்பர்களிடம் தான் முதலில் கூறுவான். ☐
2. வருண் வீட்டில் நாய்க்குட்டி இருக்கிறது. ☐
3. வருணுக்குக் கால்பந்து விளையாடத்தெரியும். ☐
4. வருண் தாத்தாவுடன் சேர்ந்து பாடுவான். ☐
5. வீட்டிற்கு உறவினர்கள் வந்தால் வருண் மகிழ்ச்சி அடைவான். ☐

## பொருத்துக.

1. வருணின் அம்மா - வெளியில் அழைத்துச் செல்வார்
2. வருணின் அப்பா - நன்றாகப் பாடுவார்
3. வருணின் தாத்தா - கதைகள் கூறுவார்
4. வருணின் பாட்டி - எதையும் பொறுமையாகக் கேட்பார்
5. வருணின் தங்கை - வருணைப் போலவே செய்து காட்டுவாள்

## வாய்மொழி விடை தருக.

1. வருணைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறுக.

## விடை எழுதுக.

1. வருணை எவ்வாறெல்லாம் அழைக்கிறார்கள்?
2. வருண் யாருடன் சேர்ந்து பாடல்கள் பாடுவான்?

# இவர்கள் இப்படி அழைத்தால்...

## பிடிக்காது

கருப்பி



குண்டுப்பூசணிக்காய்



முட்டைக்கண்ணு



## பிடிக்கும்



பட்டுக்குட்டி



செல்லக்குட்டி



அழகா

பிறரைக் கேலி செய்யும் வகையில் அழைப்பது சரியா? கலந்துரையாடுக.
உன்னை எப்படியெல்லாம் அழைப்பார்கள்?

## உறவுமுறையை அறிந்து அழைப்பேன்

| | | | |
|---|---|---|---|
| 1. | அம்மாவின் | அக்கா | பெரியம்மா |
| | | தங்கை | |
| 2. | அப்பாவின் | தம்பி | |
| | | அண்ணன் | |
| 3. | அம்மாவின் | அண்ணன் | |
| | | தம்பி | |
| 4. | அப்பாவின் | அக்கா | |
| | | தங்கை | |



## 5. வண்ணம் தொட்டு...

வண்ணம் தொட்டு வண்ணம் தொட்டு
படங்கள் வரையலாம்
வானவில்லைத் தொட்டும் கொஞ்சம்
படங்கள் வரையலாம்
நீலம் தொட்டு நீலம் தொட்டு
கடலும் வரையலாம்
கடலலையில் கடலலையில்
கால்கள் நனைக்கலாம்

பச்சைதொட்டு பச்சைதொட்டு
மரங்கள் வரையலாம்
மரக்கிளையில் மரக்கிளையில்
ஊஞ்சல் ஆடலாம்

சிவப்பு தொட்டு சிவப்பு தொட்டு
பூக்கள் வரையலாம்
பூக்கள் போல பூக்கள் போல
பூத்துச் சிரிக்கலாம்





**பாடல்களைக் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்க - பாடி மகிழ்க.**



# பயிற்சி

## சொல்லிப் பழகுக.

வரையலாம் | ஆடலாம் | பாடலாம்

சிரிக்கலாம் | கடலலை

## படித்தும் எழுதியும் பழகுக

வண்ணம் | கால்கள்

மரங்கள் | கடலலை | வானவில் | படங்கள்

பூக்கள் | மரக்கிளை

## பொருத்துக

1. கடலலையில் - படங்கள் வரையலாம்
2. பூக்கள் போல - கால்கள் நனைக்கலாம்
3. வண்ணம் தொட்டு - ஊஞ்சல் ஆடலாம்
4. மரக்கிளையில் - பூத்துச் சிரிக்கலாம்

## பேசுவோம் வாங்க!

வானவில்லைத் தொட்டு என்னென்ன வரைந்தார்கள்?

## ஒத்த ஓசையில் முடியும் சொற்களை மட்டும் வட்டமிடுக

| | | | |
|---|---|---|---|
| படங்கள் | ஊஞ்சல் | கால்கள் | மரங்கள் |

| | | | |
|---|---|---|---|
| வரையலாம் | பாடலாம் | வானவில் | சிரிக்கலாம் |

## வண்ணம் இது. பொருள்கள் எவை?

| | | | |
|---|---|---|---|
| வெள்ளை | சோறு | பால் | கொக்கு |
| கறுப்பு | | | |
| பச்சை | | | |
| சிவப்பு | | | |

## பாடலைத் தொடர்ந்து பாடுக

கறுப்பு தொட்டு கறுப்பு தொட்டு
.................. வரையலாம்
காகம் போல காகம் போல
கரைந்து பார்க்கலாம்

வெள்ளை தொட்டு வெள்ளை தொட்டு
...................... வரையலாம்
...............................................................
...............................................................

# படத்தையும் சொல்லையும் பொருத்துக.

ஒன்று - பல (ஒருமை - பன்மை)

| | | | |
|---|---|---|---|
|  | தொப்பி | மீன்கள் |  |
|  | மீன் | பந்துகள் |  |
|  | பந்து | தொப்பிகள் |  |
|  | பூ | கோழிகள் |  |
|  | கோழி | பட்டங்கள் |  |
|  | பட்டம் | பூக்கள் |  |

## உரிய பன்மைச்சொல்லை எழுதுக

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யானை | யானைகள் | பூ | பூக்கள் | பழம் | பழங்கள் |
| ஏணி | .................... | ஈ | .................... | வட்டம் | .................... |
| கரடி | .................... | பசு | .................... | காகிதம் | .................... |
| குரங்கு | .................... | புறா | .................... | மரம் | .................... |
| கிளி | .................... | மைனா | .................... | நிறம் | .................... |

# 6. என் கற்பனையில்...



அமுதன், நாம் படம் வரையலாமா?



ஓ...வரையலாமே!



என்ன வரையலாம்?



வீடு வரையலாமா?








ஆமாம், எனக்கு வீடு வரையத் தெரியும். வரையலாம்.



தாரணி, உனக்கு பிடித்தது போல நீ வரை. எனக்குப் பிடித்தது போல நான் வரைகிறேன்.

(இருவரும் வரையத் தொடங்குகின்றனர்)



உரையாடலைக் கேட்டும் படித்தும் புரிந்துகொள்க.

 என் வீட்டிலிருந்து பார்த்தால் மலை தெரியும். 

 என் வீட்டிற்குப் பக்கத்தில் ஆறு இருக்குமே! 

 என் வீட்டின் இரு பக்கமும் மரங்கள் இருக்குமே. 

 என் வீட்டிற்கு முன்பக்கம் அழகான பூச்செடிகள் இருக்கும். 

 வீட்டிற்கு எனக்குப் பிடித்த நீல வண்ணம் தீட்டுவேன். 

 என் வீட்டிற்கு சிவப்பு வண்ணம் தீட்டுவேன். 

 என் வீட்டில் எனக்குப் பிடித்த நாய்க்குட்டி வரைவேனே! 

 என் வீட்டுத் தோட்டத்தில் வாத்துகள் விளையாடுமே! 

 என் வீட்டு வாசலில் கோலம் போடுவேனே! 

 என் வீட்டின் படிக்கட்டில் சறுக்குப் பலகை இருக்குமே. 

 நான் வரைந்து முடித்துவிட்டேன்.

 நானும் வரைந்து விட்டேன்.

 நீ வரைந்த வீடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

 உன் வீடும் அழகாக உள்ளது.

## எது யாருடைய வீடு? கண்டுபிடியுங்கள். எழுதுங்கள்





பெருமிதம்



நாங்கள் வரைந்த படங்களைப் பார்த்து எல்லாரும் பாராட்டினார்கள். பெருமையாக இருந்தது. நீங்கள் எப்பொழுதெல்லாம் பெருமைப்பட்டிருக்கிறீர்கள்?



உனக்குப் பிடித்ததை நீயும் வரையலாமே

## பயிற்சி

**படித்துப் பழகுக**

| | |
|---|---|
| படம் வரையலாமா | பிடித்ததுபோல |
| இரு பக்கமும் | வீட்டிற்குப் பக்கத்தில் |
| ஊஞ்சல் ஆடலாம் | சறுக்கி விளையாடலாம் |

**எழுதிப் பழகுக.**

| | | | |
|---|---|---|---|
| வீடு | தோட்டம் | படிக்கட்டு | மலை |
| ஆறு | பூனைக்குட்டி | வாத்து | சறுக்குப்பலகை |

**பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗**

1. தாரணியின் வீட்டிலிருந்து பார்த்தால் மலை தெரியும். ☐
2. அமுதன் வீட்டின் இரு பக்கங்களிலும் மரங்கள் இருக்கின்றன. ☐
3. தாரணியின் வீடு மஞ்சள் நிறமுடையது. ☐
4. அமுதன் வீட்டில் வாத்துகள் இருக்கின்றன. ☐
5. தாரணி வீட்டு மரத்தில் ஊஞ்சல் ஆடலாம். ☐

**வாய்மொழி விடை தருக.**

1. அமுதன், தாரணி வரைந்தனவற்றுள் உனக்குப் பிடித்தவை எவை? காரணம் கூறுக.

**விடை எழுதுக.**

1. அமுதனும், தாரணியும் என்ன வரைந்தனர்?
2. அமுதன் என்னென்ன வரைந்தான்?
3. தாரணி வரைந்த வீடு பற்றி இரண்டு தொடர்கள் எழுதுக.

## படத்திற்குரிய பெயரை எழுதுக.

















## எந்த இடம்? என்ன பொருள்? எழுதுக

| | | |
|---|---|---|
| | வானவில் | |
| பறவை | வானம் | மேகம் |

| | | |
|---|---|---|
| | | |
| பழம் | மரம் | |

| | | |
|---|---|---|
| | | |
| | கடல் | |

| | | |
|---|---|---|
| | | |
| | காடு | |

| | | |
|---|---|---|
| | கரும் பலகை | |
| ஆசிரியர் | | மாணவர் |

| | | |
|---|---|---|
| | மின்விசிறி | |
| அடுப்பு | | போர்வை |

# என்ன பதில் சொல்லியிருப்பார்கள்?



# யார் என்ன செய்கிறார்கள்?





பெயர் : சிறுவன் ......................................

செயல் : தூங்குகிறான் ......................................

பெயர் : மீன் ......................................

செயல் : ......................................





பெயர் : ......................................

செயல் : ......................................

பெயர் : ......................................

செயல் : ......................................





பெயர் : ......................................

செயல் : ......................................

பெயர் : ......................................

செயல் : ......................................

# 7. விட்டுச் செல்லாதே












எளிய சொற்களையும் தொடர்களையும் உரிய ஒலிப்புடன் உரக்கப் படிக்க.




ஒழுகை

எனக்குப் பிடித்த பொருள்
தொலைந்துவிட்டால், நான் கலங்கிப்போவேன்.
நீங்கள் என்ன செய்வீர்கள்?



## பயிற்சி

படித்துப் பழகுக

| | |
|---|---|
| விட்டுச்செல்லாதே | கரிக்கோல் |
| கிடைத்துவிட்டது | தேடுவாளே |
| மறந்துவிட்டான் | தெரிந்துவிடும் |

எழுதிப் பழகுக.

| | | | |
|---|---|---|---|
| கரிக்கோல் | பிடிக்கும் | நாளை | மாலை |
| இங்கே | எங்கே | துருவி | அழிப்பான் |

பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗

1. மங்கை அழிப்பானை வீட்டில் மறந்து வைத்துவிட்டாள். ☐
2. கவிதா தனது துருவியை மறந்து பள்ளியில் விட்டுச் சென்றாள். ☐
3. வேந்தனுக்குக் கரிக்கோல் கூராக இருந்தால் பிடிக்காது. ☐
4 மங்கை, வேந்தன், கவிதா மூவரும் ஒரேவகுப்பில் படிக்கிறார்கள். ☐
5. பொம்மை போட்ட அழிப்பான் மங்கையினுடையது. ☐

பொருத்துக.

1. கவிதா என்னை எடுக்காமல் சென்றுவிட்டாள் - மங்கை
2. எழுதும்போது பிழையானால் என்னைத் தேடுவாளே - கவிதா
3. இங்கேயும் இல்லையே - வேந்தன்
4. இங்கே தானே வைத்தேன் - கரிக்கோல்
5. எங்கே போனது? - அழிப்பான்

வாய்மொழி விடை தருக.

1. கரிக்கோல், துருவி, அழிப்பான் இவை மூன்றும் என்ன நினைத்து வருத்தப்பட்டன?

விடை எழுதுக.

1. வகுப்பில் யார் யார் என்னென்ன பொருள்களை விட்டுச் சென்றனர்?
2. விட்டுச்சென்ற பொருள்கள் உரியவர்களுக்கு எப்போது கிடைத்தன?

### வண்ணமிட்ட சொல் யாரைக் குறிக்கிறது?




அவள் என்பது

☐ கவிதா

☐ மங்கை




அவர்கள் என்பது

☐ அழிப்பான், துருவி, கரிக்கோல்

☐ கவிதா, மங்கை, வேந்தன்

### பொருத்தமான சொல்லை எழுதி நிரப்புக.

( அது, அவன், அவள், அவை, அவர்கள்)

1. கோதை இரண்டாம் வகுப்பு படிக்கிறாள்.
   ............................... அழகாக ஓவியம் வரைகிறாள்.
2. வளவன் மிதிவண்டி ஓட்டுகிறான்.
   ............................... பள்ளிக்குச் செல்கிறான்.
3. பயணிகள் பேருந்தில் ஏறுகின்றனர்.
   ............................... சுற்றுலா செல்கின்றனர்.
4. பூனை பால் குடிக்கிறது.
   ............................... எலியைப் பிடிக்கும்.
5. கதைப் புத்தகங்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்.
   ............................... மாமா வாங்கித் தந்தவை.



## 8. இறகு



பார்க்கப் பார்க்க அழகுதான்
பளபளக்கும் இறகுதான்
நேற்றுக் கண்டு எடுத்தது
நேர்த்தியான இறகிது

ஏழு வண்ணம் காட்டிடும்
இந்த நல்ல இறகினைக்
கீழே போட்ட பறவையே
கேட்டால் உடனே
தருகிறேன்

எந்தப் பறவை போட்டதோ?
எங்குத் தேடி அலையுதோ!
சொந்தக்காரப் பறவையே
வந்து கேட்டால் தருகிறேன்.



- அழ.வள்ளியப்பா

## பயிற்சி

### சொல்லிப் பழகுக.

அழகுதான் | பறவையே | இறகுதான்

தருகிறேன் | எடுத்தது

போட்டதோ | இறகிது | அலையுதோ

### படித்தும் எழுதியும் பழகுக

பார்க்கப் பார்க்க | பளபளக்கும்

நேர்த்தியான | கண்டு எடுத்தது | ஏழு வண்ணம் | உடனே தருகிறேன்

வந்து கேட்டால் | சொந்தக்காரப் பறவை

### ஒத்த ஓசையுடைய சொற்களைப் பொருத்துக.

1. இந்த - அலையுதோ
2. அழகு தான் - இறகிது
3. போட்டதோ - எந்த
4. எடுத்தது - இறகுதான்

### பேசுவோம் வாங்க!

இறகைக் கண்டெடுத்த குழந்தை என்ன செய்ய நினைத்தது? ஏன்?

## எவை யாருடைய கண்கள் கண்டுபிடி

ரைகுதி　　னையா　　ந்தைஆ　　ல்ணிஅ









## தந்தது யார்?






பறவைக் குஞ்சுகளுக்கு உணவு கொடுத்தது யாராக இருக்கும்? கண்டுபிடித்து வட்டமிடுங்கள்

# 9. ஆத்திசூடி




நன்மை கடைபிடி


எனக்கு நீச்சல் பிடிக்கும். நீரில் நீந்துவது எவ்வளவு மகிழ்ச்சியானது.
ஆமாம், ஆமாம் எனக்கும் தான்
சுழல் நிறைந்த பகுதி
எச்சரிக்கை
நான் இன்னும் உள்ளே ஆழமாகச் சென்று நீந்தப் போகிறேன்.
வேண்டாம்! வேண்டாம்! அங்கே பார்த்தாயா எச்சரிக்கைப் பலகையை!
ஆனாலும் இது ஆபத்தானதே!
நீச்சல் போட்டி என்றாலே எனக்கு ஆனந்தம். எல்லாப் போட்டியிலும் எனக்குத்தான் முதல் பரிசு! தெரியுமா!
எனக்குப் பயமில்லை துணிந்தவர்கள் என்னோடு வரலாம்.
நான் வருகிறேன்
நானும் வருகிறேன்
சே! சே! நான் தைரியசாலி நான் மேலும் போகிறேன்.
ஆ... இப்போது எனக்குப் பயமாக இருக்கிறது. இதற்கு மேல் நான் வரவில்லை!
ஐயோ! காப்பாற்றுங்கள். சுழலில் சிக்கிக் கொண்டேன். என்னைக் காப்பாற்றுங்கள்.
சுழல் நிறைந்த பகுதி
எச்சரிக்கை

## நீர் விளையாடேல்

# ஆத்திசூடி







நூல் பல கல்






ஈரோடு மாவட்டம் சேமூரைச்
சேர்ந்த சிறுவன் முகம்மது யாசின்.
அரசுப்பள்ளியில் இரண்டாம்
வகுப்பு படிக்கிறான்.

ஒரு நாள் பள்ளிக்குச் செல்லும்
போது சாலையோரத்தில்
ஐம்பதாயிரம் ரூபாயைக் கண்டான்.
அப்பணத்தை ஆசிரியரின்
உதவியுடன் காவல்
நிலையத்தில் ஒப்படைத்தான்.

அவனுக்குக் காவல் துறையினர்
வாழ்த்து தெரிவித்தனர்.
பலரும் யாசினைப் பாராட்டினர்.

நேர்பட ஒழுகு




நோயினுக்கு இடம் கொடேல்

## பயிற்சி

படித்தும் எழுதியும் பழகுக

நன்மை கடைபிடி

நீர் விளையாடேல்

நூல் பல கல்

நேர்பட ஒழுகு

நோயினுக்கு இடம் கொடேல்

### பொருத்துக



நூல் பல கல்



நன்மை கடைபிடி



நேர்பட ஒழுகு



நோயினுக்கு இடம் கொடேல்

# தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம்


கரிக்கோல்

கரும்பலகை



துருவி

அழிப்பான்



வரைமெழுகு

புத்தகப்பை



அடையாள அட்டை

சாலை



மின்விசிறி

மேசை



விளையாட்டுத்திடல்

தண்ணீரப் புட்டி



வாயில் கதவு

மதில்



பழச்சாறு

பழப்பாகு




பனிக்கூழ்

நாள்காட்டி




வறுவல்

மெதுரொட்டி


# வந்த பாதை

முதல் எழுத்தை மாற்றிப் பறவையின் பெயரை உருவாக்குக.



| | |
|---|---|
| பாக்கு | |
| ரயில் | |
| கன்னம் | |
| பாகம் | |
| சந்தை | |

முதல் எழுத்தை நெடிலாக மாற்றிப் புதிய சொல் உருவாக்குக.



| | |
|---|---|
| குடம் | |
| சட்டை | |
| படம் | |
| புட்டு | |
| முட்டை | |

படத்திற்குப் பொருத்தமான சொல்லை எடுத்து எழுதுக.

வால் வாள்



புலி புளி



கோழி கோலி



வெள்ளம் வெல்லம்



பல்லி பள்ளி



மலை மழை





## இரண்டாம் எழுத்தை நீக்கிப் புதிய சொல்லை உருவாக்குக.

| | |
|---|---|
| பகல் | |
| மழலை | |
| ஆண்டு | |
| ஆவணி | |
| பாடல் | |
| சட்டை | |









## சொல்லுக்குள் மறைந்திருக்கும் சொல்லைக் கண்டுபிடித்து எழுதுக.

| | |
|---|---|
| பலாமரம் | |
| வௌவால் | |
| சலங்கை | |
| கண்மை | |
| விண்மீன் | |

## சொற்படிக்கட்டுகளை நிரப்புக

| | | | | |
|---|---|---|---|---|
| பை | | | | |
| ச | பை | | | |
| கு | ப் | பை | | |
| அ | க | ப் | பை | |
| நெ | கி | ழி | ப் | பை |

| | | |
|---|---|---|
| தை | | |
| | தை | |
| | | தை |

| | | | | |
|---|---|---|---|---|
| நா | | | | |
| நா | ன் | | | |
| நா | ன் | கு | | |
| நா | ற் | கா | லி | |
| நா | ள் | கா | ட் | டி |

| | | |
|---|---|---|
| தா | | |
| தா | | |
| தா | | |